


# ‘பாரத் சங்கீத் உத்சவ்’ இசை விழா துவங்கியது

# 83வது பிறந்த நாள் விழாவில் 2 புத்தகங்களை எழுதி வெளியிட்டார் நல்லி குப்புசாமி செட்டியார்

## நீதிபதி ராமநாதன், மூத்த வழக்கறிஞர் பி.பி.ராமானுஜம் வாழ்த்து

**சென்னை, நவ.14–**

‘கர்நாடிகா’ அமைப்பும், ஸ்ரீ பார்த்தசாரதிசுவாமிசபாவும் இணைந்து நடத்தும் ‘பாரத் சங்கீத் உத்சவ்–2022’ என்னும் இசை விழாவின் துவக்க நாளில் டாக்டர் குப்புசாமி செட்டியாரின் 83வது பிறந்த நாள் மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அப்போது அவர் எழுதிய 2 புத்தங்கள் வெளியிடப்பட்டது. ஆழ்வார்பேட்டை நாரத கான சபாவில் விழா நடந்தது.

ஸ்ரீ ரமண மகரிஷி மஹாத்மியம், அள்ளித் தந்த பூமி ஆகிய புத்தகங்களை நீதிபதி ஆர்.எஸ். ராமநாதன் வெளியிட்டார். முதல் பிரதியை மூத்த வழக்கறிஞர் பி.பி. ராமானுஜம் பெற்றுக் கொண்டார். சேஷாத்ரி சுவாமிகள் பற்றிய புத்தகத்தில், இனி வரும் நாட்களில் யாரும் மேற்கொண்டு தகவல் – புகைப்படங்களை அனுப்பினால் அவை 2வது பதிப்பில் சேர்க்கப்படும் என்று பத்திரிகையாளரும், ‘நல்லி’யின் நெருங்கிய சகாவுமான நடராஜன் தெரிவித்தார்.

பிரபல கர்நாடக இசைக் கலைஞர்கள் நெய்வேலி சந்தானகோபாலன், லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன், லால்குடி விஜயலட்சுமி மற்றும் திருவாரூர் பக்தவத்சலம் ஆகியோருக்கு ‘‘கர்நாடக இசையின் உலகளாவிய தூதர்கள்’’ விருது வழங்கப்பட்டது.

நல்லி குப்புசாமி செட்டியார் முன்னிலையில் நீதிபதி ஆர்.எஸ். ராமநாதன், மூத்த வழக்கறிஞர் பி.பி. ராமானுஜம், டாக்டர் ஆர்.நடராஜன், பார்த்தசாரதி சுவாமி சபா செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, கர்நாடிகா சசிகிரண் ஆகியோர் இந்த விருதுகளை வழங்கினார்கள்.

முடிவில் ‘‘கலா சங்கமம்’’ என்ற தலைப்பில் ஒரு கூட்டு இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் நுண்கலை பல்கலைக்கழகம், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, தமிழ் இசைக் கல்லூரி ஆகியவற்றில் மாணவர்கள் 75 வாத்தியக் கருவிகளை இசைத்தனர்.

சென்னையில் உள்ள பிஎஸ்பிபி பள்ளிகள், சிறுசேரி பிஎஸ்பிபி மில்லீனியம் பள்ளி, பி.எஸ். சீனியர் செகன்டரி பள்ளி, ஏ.எம்.எம்.பள்ளி, விருக்ஷா பள்ளி ஆகிய பள்ளிகளின் 400 மாணவர்கள் சேர்ந்திசை நடத்தினார்கள். பார்வையாளர்கள் எழுந்து நின்று கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர். டாக்டர் சுதா ராஜா தலைமையிலான ‘சாகம்’ குழு இந்நிகழ்ச்சியை நடத்தியது.

பிரபல சபாக்களின் செயலாளர்கள், இயல் – இசை நாடகக்கலைஞர்கள், சினிமா பிரமுகர்கள், டைரக்டர் எஸ். பி.முத்துராமன், நடிகைகள் காஞ்சனா, சச்சு, எழுத்தாளர்கள் ‘கலைமாமணி’ ஏர்வாடி ராதாகிருஷ்ணன், அமுதா பாலகிருஷ்ணன், ‘இதயகீதம்’ ராமானுஜம், இசைக்கவி ரமணன் உள்ளிட்ட பலரும் மேடையில் நல்லி குப்புசாமி செட்டிக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துக் கூறினார்கள். அழகு தமிழில் நாடகாசிரியர் ‘கலைமாமணி’ சந்திரமோகன் தொகுத்து வழங்கினார். நாளை (15ந் தேதி) வரை நடைபெறும் இசை விழா இது.

# வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்க போட்டியில் வென்ற அணிகள்: தமிழ்நாடு சங்கத் தலைவர் அசோக் சிகாமணி சுழற்கோப்பை வழங்கினார்

## மாவட்ட கிரிக்கெட் சங்க தலைவர் ஜி.வி.சம்பத்துக்கு பாராட்டு

**வேலூர், நவ.14–**

**வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்க சார்பில் நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மாவட்ட கிரிக்கெட் சங்க தலைமையில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் பி. அசோக் சிகாமணி சுழற்கோப்பைகளை வழங்கினார்.**




வேலூர் மவாட்ட கிரிக்கெட் சங்க ஆண்டு விழா மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கும் விழா வேலூரில் உள்ள ஜே.பி.எம். மஹாலில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்க தலைவரும் நறுவீ மருத்துவமனை தலைவருமான ஜி.வி. சம்பத் தலைமை வகித்து வரவேற்புரையாற்றினார். இதில் சங்கத்தின் ஆண்டு விழா அறிக்கையை சங்க மாவட்ட செயலாளர் எஸ். ஸ்ரீதரன் வாசித்தார்.

விழாவில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் பி. அசோக் சிகாமணி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாவட்ட அளவில் நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில் கூறியதாவது:–

வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்கம் நல்ல முறையில் இயங்கி வருவதை காண முடிகிறது. கிரிக்கெட் வீரர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அவசியம். சென்னையில் உள்ள கிரிக்கெட் அணிகள் உரிய அடிப்படை வசதிகளுடன் இயங்கி வருகின்றன. இதே போன்று தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டத்திலும் உள்ள கிரிக்கெட் அணிகள் விளையாடுவதற்கான மைதானம் உட்பட தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தி தரவேண்டும். இதற்கு தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் அனைத்து வகையில் உதவி

செய்யத் தயராக உள்ளது.

கிரிக்கெட் வீரர்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி, சிறந்த கிரிக்கெட் வீரர்களாக உருவாக வேண்டும். கிரிக்கெட் வீரர்களின் தரத்தினை உயர்த்தும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பேட்ஸ்மேன் மற்றும் வேக பந்து வீச்சாளர்கள் தேர்வு செய்து அவர்களுக்கு நல்ல பயிற்சி வழங்க வேண்டும். இளைஞர்கள் கிரிக்கெட் மட்டுமின்றி ஏதாவது ஒரு விளையாட்டில் தங்களை ஈடுபடுத்தி கொள்ள வேண்டும்.

நிகழ்ச்சியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைமை செயல் அலுவலர் கே.எஸ். விஸ்வநாதன் கவுரவ விருந்தினராக பங்கேற்றார். அப்போது அவர் பேசுகையில், கடந்த 10 ஆண்டுகளாக கவனித்து வருகிறேன். ஒவ்வொரு மாநில கிரிக்கெட் அணியில் குறைந்தது 7 வீரர்களாவது மாவட்ட அளவிலான கிரிக்கெட் சங்கத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டவர்களாக இருந்துள்ள னர். தற்போது மாவட்ட அளவிலான கிரிக்கெட் அணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர உள்ளதால் மேலும் பல சிறந்த கிரிக்கெட் வீரர்கள் உருவாக வாய்ப்புகள் உள்ளது.

நம் நாட்டில் சிறந்த கிரிக்கெட் வீரர்களை தேர்ந்தெடுக்கும் முறை தமிழ்நாட்டில் தான் முதலிலிருந்தே உரிய முறையில் நடைபெற்று வருகிறது. வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்க தலைவராக நறுவீ மருத்துவமனை தலைவர் ஜி.வி. சம்பத் பொறுப்பேற்றுள்ளார். இனிமேல் வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது’.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க துணை செயலாளர் ஆர்.என். பாபா, வேலூர் மாவட்ட சங்க நிர்வாகிகள் விஜயகுமார், கிருஷ்ணகுமார், தினேஷ்குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். முடிவில் சங்க இணை செயலாளர் ஜி. நாகராஜன் நன்றி கூறினார்.

# பொதுத்துறை வங்கிகளில் அதிகபட்சமாக கடன் வழங்கியதில் மகாராஷ்டிரா வங்கி முதலிடம்

## நிர்வாக இயக்குனர் ஏ.எஸ். ராஜீவ் பெருமிதம்

**சென்னை நவ. 14–**

பொதுத்துறை வங்கிகளில் செப்டம்பர் மாதத்துடன் முடிந்த 2வது காலாண்டில் மகாராஷ்டிரா வங்கி அதிகபட்சமாக 28.62% அளவுக்கு அதிகமாக மொத்த அளவில் கடன் ரூ. 1 லட்சத்து 48 ஆயிரத்து 216 கோடி வழங்கி உள்ளது என்று வங்கியின் நிர்வாக இயக்குனரும் தலைமை செயல் அதிகாரியுமான ஏ. எஸ். ராஜீவ் தெரிவித்தார்.



புனே நகரை தலைமை இடமாக கொண்டு செயல்படும் மகாராஷ்டிரா வங்கி கடன் வழங்குவதில் பெருமளவில்சாதனைபடைத்துள்ளது. பொதுத்துறை வங்கிகள் வெளியிட்ட 2வது காலாண்டு நிதிநிலை முடிவு அறிக்கைகளில் மகாராஷ்டிரா வங்கி அதிகபட்சமாக 28.62% கடன் வழங்கியது அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதே போல பொதுத்துறை வங்கிகளில் சில்லறை கடன், விவசாய கடன் மற்றும் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன் அளவும் 22.31% ஆக அதிகரித்து முதல் இடம் பிடித்துள்ளது என்றார்.

வங்கிகளிடையே மொத்த வணிக வளர்ச்சியில் இவ்வங்கி 15.92% ஆக உயர்ந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். முதல் அரையாண்டுக்கான வர்த்தகமும் ரூ. 3 லட்சத்து 44 ஆயிரத்து 65 கோடியாக உயர்ந்துள்ளது என்றார்.

இவ்வங்கி டெபாசிட் வளர்ச்சி 7.86% அதிகமாக ரூ. 1 லட்சத்து 95 ஆயிரத்து 849 கோடியாக உயர்ந்துள்ளது. மொத்த டெபாசிட்டுகள் வளர்ச்சியில் இவ்வங்கி 5வது இடத்தில் உள்ளது. குறைந்த வட்டியில் டெபாசிட் பெறுவதில் 56. 27% அளவுக்கு வளர்ச்சி அடைந்து முதல் இடத்தை பிடித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

2வது காலாண்டில் வராக்கடன் அளவு குறைந்து தொடர்ந்து தரமான கடன்கள் வழங்கி உள்ளதால் வங்கியின் நிகர வட்டி மார்ஜின் அளவில் 3.55% லாப விகிதம் பெற்றுள்ளது. இது பொதுத்துறை வங்கிகளில் அதிகபட்சமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

வராக்கடன் அளவு மிகக்குறைவாக மகாராஷ்டிரா வங்கி மற்றும் ஸ்டேட் வங்கி உள்ளன. மொத்த அளவு வராக்கடன் மகாராஷ்டிரா வங்கியில் 3.40% ஆகவும், நிகர வராக்கடன் அளவு ஒரு சதவிகிதத்தை விட குறைவாக 0.68% ஆக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# இந்தோனேஷியாவின் 2 பல்கலைக்கழகங்களுடன் சவீதா மருத்துவ அறிவியல் நிறுவனம் ஒப்பந்தம்

**சென்னை, நவ.14–**

**இந்தியா மற்றும் இந்தோனேஷியா இடையே, கல்வி நிறுவனங்களின் கூட்டாண்மையை வலுப்படுத்தும் வகையில், இந்தோனேஷியா தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள திரிசக்தி மற்றும் இந்தோனேஷியா பல்கலைக்கழகத்துடன் சவீதா மருத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.**




இந்த ஒப்பந்தத்தின் மூலம் மாணவர், ஆசிரியர் பரிமாற்ற திட்டம் மற்றும் பயனுள்ள ஆராய்ச்சி ஒத்துழைப்பு போன்றவை மேற்கொள்ளப்பட உள்ளது. திரிசக்தி பல்கலைக்கழகத்தின் பல்மருத்துவதுறை டீன் மற்றும் பேராசிரியர் டாக்டர். எர்ரி அஸ்டோட்டி மற்றும் இந்தோனேஷியா பல்கலைக்கழகத்தின் கல்வி விவகாரங்களுக்கான துணைத்தலைவர் டாக்டர். ஜகாசெம்பிரிங், அப்பல்கலைக்கழகத்தின் பல்மருத்துவதுறை டீன் மற்றும் பேராசிரியர் டாக்டர். நியா அயு இஸ்மானியட்டி மற்றும் சர்வதேச விவகாரங்கள் துறை டீன் டாக்டர் லட்சுமி தங்கவேலு, சவீதா மருத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ டீன் டாக்டர் சிந்து ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.


## சாயாஜி ஹோட்டல்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எப்1 சி2, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை–600 117 (தமிழ்நாடு)
போன்: 044-29871174 | Email: cs@sayajigroup.com | Website: www.sayajihotels.com | CIN:L51100TN1982PLC124332

**30 செப்டம்பர், 2022–ல் முடிந்த அரையாண்டு/ காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(இந்திய ரூபாயில் லட்சத்தில் இபிஎஸ் தவிர)

| வ. எண். | விவரங்கள் | தனியானது | | | | ஒருங்கிணைந்தது | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | | முடிந்த அரையாண்டு | | முடிந்த காலாண்டு | | முடிந்த அரையாண்டு | |
| | | 30.09.2022 (தணிக்கை செய்யாதது) | 30.09.2021 (தணிக்கை செய்யாதது) | 30.09.2022 (தணிக்கை செய்யாதது) | 30.09.2021 (தணிக்கை செய்யாதது) | 30.09.2022 (தணிக்கை செய்யாதது) | 30.09.2021 (தணிக்கை செய்யாதது) | 30.09.2022 (தணிக்கை செய்யாதது) | 30.09.2021 (தணிக்கை செய்யாதது) |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் (நிகரம்) | 5230.01 | 3,654.21 | 11,197.78 | 4,684.78 | 5,272.28 | 3,704.57 | 11,294.70 | 4,758.02 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்#) | 1,821.93 | 2,044.20 | 4,104.07 | 1,196.19 | 425.39 | 223.76 | 1,671.90 | (682.65) |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்#) | 1,821.93 | 2,044.20 | 4,104.07 | 1,196.19 | 649.45 | 330.09 | 2,373.82 | 2,817.02 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்#) | 1,878.24 | 1,494.55 | 3,404.77 | 908.18 | 628.46 | (297.65) | 1,592.89 | 1,906.24 |
| 5 | காலத்திற்கான மொத்த பரிபூரண வருமானம் /(நஷ்டம்) (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர பரிபூரண வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 1,879.16 | 1,491.91 | 3,422.20 | 922.09 | 627.29 | (291.06) | 1,581.98 | 1,897.39 |
| 6 | சமபங்கு மூலதனம் | 1,751.80 | 1,751.80 | 1,751.80 | 1,751.80 | 1,751.80 | 1,751.80 | 1,751.80 | 1,751.80 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஷீட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. | - | - | - | - | - | - | - | - |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/–) (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | | | | | |
| | அடிப்படை | 10.58 | 8.36 | 19.15 | 4.84 | 3.44 | (1.87) | 8.81 | 10.54 |
| | டைலூடட் | 10.58 | 8.36 | 19.15 | 4.84 | 3.44 | (1.87) | 8.81 | 10.54 |

குறிப்பு: அ. SEBI (பட்டியல் மற்றும் இதர வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, விதி 33 மற்றும் 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அரையாண்டு/ காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. அரையாண்டு/ காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளம் (www.sayajihotels.com)ல் உள்ளது.

குழு உத்தரவுப்படி
**சாயாஜி ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக**
ஒப்பம்/–
**T.N. உன்னி**
சேர்மன்

இடம்: இந்தூர்
தேதி: 12.11.2022



## ப்ரித்வி எக்சேஞ்ச் (இந்தியா) லிமிடெட்

CIN: L30006TN1995PLC031931
பதிவு அலுவலகம்: ஜீ ஜீ யுனிவர்சல், 2வது மாடி, கதவு எண்.2, மெக் நிக்லோஸ் சாலை,
சேத்துப்பட்டு, சென்னை – 600 031, தமிழ்நாடு
Website: www.prithvifx.com , Email: secy@prithvifx.com, Phone: 044 -43434261

**30 செப்டம்பர், 2022ல் முடிந்த அரையாண்டு மற்றும் காலாண்டுக்கான தணிக்கையாகாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்**

ஒரு பங்கு சம்பாத்தியம் தவிர (ரூ.லட்சத்தில்)

| விவரங்கள் | முடிந்த 3 மாதங்கள் 30.09.2022 | முடிந்த 3 மாதங்கள் 30.06.2022 | முடிந்த 3 மாதங்கள் 30.09.2021 | 30.09.2022ல் முடிந்த நடப்பு காலத்திற்கான ஆண்டு முதல் தேதி வரையிலான புள்ளி விவரங்கள் | 30.09.2021ல் முடிந்த கடந்த ஆண்டிற்கான ஆண்டு முதல் தேதி வரையிலான புள்ளி விவரங்கள் | முடிந்த ஆண்டு 31.03.2022 |
|---|---|---|---|---|---|---|
| | தணிக்கை யாகாதது | தணிக்கை யாகாதது | தணிக்கை யாகாதது | தணிக்கை யாகாதது | தணிக்கை யாகாதது | தணிக்கை யானது |
| மொத்த வருமானம் | 81,144.05 | 77,069.42 | 34,956.32 | 1,58,213.47 | 56,740.40 | 1,51,940.54 |
| மொத்த செலவுகள் | 80,939.04 | 76,955.13 | 34,952.95 | 1,57,894.17 | 56,777.42 | 1,51,929.02 |
| வரிக்கு முன் லாபம் | 205.01 | 114.29 | 3.37 | 319.30 | (37.02) | 11.52 |
| வரி செலவு | 25.00 | – | – | 25.00 | | 6.17 |
| வரிக்கு பின் லாபம் | 180.01 | 114.29 | 3.37 | 294.30 | (37.02) | 5.35 |
| மொத்த விரிவான வருமானம் | 181.33 | 100.26 | 44.90 | 281.59 | 37.70 | 92.64 |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ. 10) | 824.97 | 824.97 | 824.97 | 824.97 | 824.97 | 824.97 |
| இதர ஈக்விடி | ... | ... | ... | ... | ... | 1,914.78 |
| ஒரு பங்கு சம்பாத்தியம் | | | | | | |
| (ஏ) அடிப்படை | 2.22 | 1.39 | 0.04 | 3.61 | (0.45) | 0.10 |
| (பி) டைலூட்டட் | 2.22 | 1.39 | 0.04 | 3.61 | (0.45) | 0.10 |

குறிப்பு:
1) SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 2வது காலாண்டுக்கான தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகளின் (தனியானது மற்றும் ஒருங்கிணைந்தது) விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சு இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.prithvifx.comல் உள்ளது.
2) கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தர நிலைகள் (இண்ட் ஏஎஸ்) மற்றும் கம்பெனிகள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள் 2015ன் விதி 3 மற்றும் கம்பெனிகள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) திருத்த விதிகள், 2016க்கு இணங்க 30 செப்டம்பர் 2022 அன்று முடிவடைந்த அரையாண்டு / காலாண்டிற்கான மேற்கண்ட தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகள் குறித்து சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் தகுதியற்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.
3) 30 செப்டம்பர் 2022 அன்று முடிந்த அரையாண்டு / காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத மேற்கண்ட தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் 12 செப்டம்பர் 2022 அன்று தணிக்கை குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு அன்று நடந்த இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
4) கம்பெனி ஒரு பகுதியாக அதாவது ‘‘அன்னிய செலாவணி’’ என்ற பகுதியாக செயல்படுகிறது. எனவே, ஒரே ஒரு பகுதி அறிக்கையாக உள்ளது.
5) தனியான முடிவுகள் தொடர்பாக செபி (எல்ஓடிஆர்) விதிமுறைகள், 2015ன் கீழ் தேவைப்படும் விவரங்கள் பின்வருமாறு: (ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | முடிந்த 3 மாதங்கள் 30.09.2022 | முடிந்த 3 மாதங்கள் 30.06.2022 | முடிந்த 3 மாதங்கள் 30.09.2021 | 30.09.2022ல் முடிந்த நடப்பு காலத்திற்கான ஆண்டு முதல் தேதி வரையிலான புள்ளி விவரங்கள் | 30.09.2021ல் முடிந்த கடந்த காலத்திற்கான ஆண்டு முதல் தேதி வரையிலான புள்ளி விவரங்கள் | முடிந்த ஆண்டு 31.03.2022 |
|---|---|---|---|---|---|---|
| | தணிக்கை யாகாதது | தணிக்கை யாகாதது | தணிக்கை யாகாதது | தணிக்கை யாகாதது | தணிக்கை யாகாதது | தணிக்கை யானது |
| டேர்ன்ஓவர் | 81,127.00 | 77,047.58 | 34,938.09 | 1,58,174.58 | 56,701.13 | 1,51,833.52 |
| வரிக்கு முன் லாபம் | 210.08 | 114.66 | 3.34 | 324.74 | (37.07) | 17.28 |
| வரிக்கு பின் லாபம் | 185.08 | 114.66 | 3.34 | 299.74 | (37.07) | 9.66 |

6) முந்தைய காலாண்டு/ஆண்டின் புள்ளிவிவரங்கள், தற்போதைய காலாண்டின் வகைப்பாடு/வெளிப்படுத்துதலுடன் ஒத்துப்போகும் வகையில், தேவையான இடங்களில் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டு/ மறுவகைப்படுத்தப்பட்டு மற்றும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

ப்ரித்வி எக்சேஞ்ச் (இந்தியா) லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– பவன் குமார் கவாத்
(செயல் இயக்குனர்)
(DIN : 07095542)

இடம்: சென்னை
தேதி: 12.11.2022



## விர்கோ பாலிமர்ஸ் (இந்தியா) லிமிடெட்

CIN: L25200TN1985PLC011622
பதிவு அலுவலகம்: A1A, MMDA INDL COMPLEX, மறைமலை நகர், காஞ்சீபுரம்– 603 209

**30.09.2022–ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை சுருக்கம்**

(ரூ.லட்சத்தில்)

| விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த அரையாண்டு | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| | 30.09.2022 (தணிக்கை செய்யாதது) | 30.06.2022 (தணிக்கை செய்யாதது) | 30.09.2021 (தணிக்கை செய்யாதது) | 30.09.2022 (தணிக்கை செய்யாதது) | 30.09.2021 (தணிக்கை செய்யாதது) | 31.03.2022 (தணிக்கை யானது) |
| செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் (நிகரம்) | 5795.94 | 3272.07 | 2936.00 | 9068.00 | 5470.00 | 11799.28 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 54.14 | -18.73 | 29.31 | 35.41 | 37.27 | 79.05 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்கு முன் மற்றும் விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 54.14 | -18.73 | 29.31 | 35.41 | 37.27 | 79.05 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 46.14 | -18.73 | 13.69 | 27.41 | 27.27 | 54.42 |
| காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான (வரிக்கு பின்) லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானத்தை (வரிக்கு பின்) உள்ளடக்கி உள்ளது) | 46.14 | -18.73 | 13.69 | 27.41 | 27.27 | 54.42 |
| சம பங்கு மூலதனம் | 334.00 | 334.00 | 333.61 | 334.00 | 333.61 | 334.00 |
| தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளிலிருந்து ஒரு பங்கு சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன் (ஒவ்வொன்றும் ரூ.10/–) | | | | | | |
| அடிப்படை மற்றும் பலமிழந்தது | 1.38 | -0.56 | 0.41 | 0.82 | 0.82 | 1.63 |

குறிப்புகள்:
1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது.
2. காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனியான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் (www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.virgopolymers.com)–ல் கிடைக்கும்.

இயக்குனர்கள் குழுவின் சார்பாக
**விவேக் ராம்சிசாரியா**
நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை
தேதி: 12.11.2022